ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2325/85 – 2023 අප්‍රේල් මස 01 වැනි සෙනසුරාදා – 2023.04.01
*2325/85 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும்***

**அறிவித்தல்**

*255 ஆம் அத்தியாயமான நகர சைபகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 153 பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் அதிகாரத்திற்கிணங்க பேலியகொடை நகர சபையினால் தயாரிக்கப்பட்டு இங்கு பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்படும் துணை விதிகளுக்கு மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க அங்கீகரிப்பட்டது என்பதனை இங்கு அறிவிக்கின்றேன்.*

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் கார் வீஎஸ்வி யூஎஸ்பி,
பீஎச்டி (சிறப்பு) எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ,
விமானப்படையின் மார்ஷல்
ஆளுநர்,
மேல் மாகாணம்.

*மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*மேல் மாகாண சபை கட்டடம்,*
*பத்தரமுல்லை,*
*2023, மாச்சு 15.*



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## நகர சபையின் தங்குமனைகள் மற்றும் தங்குமிடங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான துணைவிதி

1. இத்துணைவிதி பேலியகொட நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தற்காலிக தங்குமிட வசதிகள் வழங்குவதற்காகப் பராமரிக்கப்படுகின்ற தங்குமனைகள், தங்குமிடம் மற்றும் வீடுகள் போன்ற இடங்களின் முறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்காக இயற்றப்பட்டதாகும்.

குறுகிய பெயர்.

2. இத்துணைவிதியானது பேலியகொட நகர சபையின் தங்குமனைகள் மற்றும் தங்குமிடங்களின் கண்காணிப்பு தொடர்பான துணை விதி என அழைக்கப்படுகின்றது.

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் 153 ஆவது பிரிவு அத்துடன் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 157(9) என்பவற்றின் கீழ் நகர சபை அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

அனுமதிப் பத்திரம் ஒன்று பெறப்பட வேண்டும் என்பது.

4. பேலியகொட நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) எந்த ஒரு நபரும் இத்துணைவிதியின் கீழ் தவிசாளரிடம் இருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி தங்குமனை அல்லது தங்குமிட வீடொன்றை (இதன் பின்னர் வளாகம் என அழைக்கப்படும்) நடாத்திச் செல்லக் கூடாது.

அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தல்.

5. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களும் இத்துணைவிதியுடன் இணைக்கப்பட்டுள்ள துணை ஆவணத்தின் ஊடாக அதற்கான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

6. மேலுள்ள வாசகத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பப்படிவம் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுவதன் ஊடாக, கொண்டு வந்து ஒப்படைப்பதன் மூலம் அல்லது அனுமதியளிக்கப்பட்ட மின்னஞ்சல் ஒன்றின் ஊடாக அனுப்பப்படுவதன் மூலம் சமர்ப்பிக்கப்படலாம்.

அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான நிபந்தனைகள்.

7. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் அனைவரும் இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதவிடத்து குறித்த விண்ணப்பதாரிக்கு நகர ஆணையாளரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக் கூடாது.

(1) வளாகத்துடன் தொடர்புடைய கட்டுமானங்கள் அவ்வாறான நோக்கத்துக்காக அனுமதி பெறப்பட்ட கட்டுமானத் திட்டங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டனவாகவும் இணக்கச் சான்றிதழைப் பெற்றனவாகவும் காணப்பட வேண்டும்.

(2) கட்டடத்தின் அனைத்து அறைகளுக்கும் தனித்தனியாக குளியலறை மற்றும் கழிப்பறைகள் காணப்படுவதோடு தரையானது பீங்கான ஓடுகள் பயன்படுத்தி அமைக்கப்பட்டதாக அல்லது சீமெந்து கொண்டு நன்றாக தயாரிக்கப்பட்டதாக அமைந்திருக்க வேண்டும்.

(3) ஒவ்வொரு கட்டடத்திலும் விறாந்தை ஒன்றும் முகாமைத்துவம் செய்வதற்கான குறிப்பிட்ட இடம் ஒன்றும் உணவு உண்பதற்கான வசதிகளுடன் போதிய இடம் தேவையான வசதிகள் அனைத்தும் கொண்டதாகக் காணப்பட வேண்டும்.

(4) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்துக்கு பொருந்தும் வகையில் விதியொன்றின் மீதான விதிமுறைகளின் கீழ் செயற்படும் சந்தர்ப்பத்தில் சமூக இடைவெளியைப் பேணுவதற்கான போதுமான ஒரு இடத்தை பராமரிப்பதற்கு முடியுமான வகையில் இருவர் தங்கும் அறைகள் அல்லது குழுக்கள் தங்கும் அறைகள் போதிய சதுர அடிகளில் பரப்பளவைக் கொண்டனவாக அமைந்திருக்க வேண்டும்.

(5) அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிப்பவர் தொடர்புடைய சொத்தின் சட்டபூர்வ உரிமை அல்லது உடைமையைக் கொண்டவராகக் காணப்பட வேண்டும்.

(6) தங்குமிடத்தின் ஒவ்வொரு அறையிலும் தங்கும் நபர்கள் தமது பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குரிய வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) திடீர் மின்தடை மற்றும் நீர் வழங்கல் தடைகள் ஏற்படும் வேளைகளில் பயன்படுத்தும் வகையில் மின்பிறப்பாக்கி மற்றும் நீர் சேமிப்பு வசதிகள் காணப்பட வேண்டும்.

(8) தங்கும் நபர்கள் தமது வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான வாகனம் நிறுத்தும் வசதிகள் காணப்பட வேண்டும்.

(9) ஊனமுற்றோர் மற்றும் விசேட தேவையுள்ளோருக்கு அவசியமான அணுகல் வசதிகள் பரிந்துரை செய்யப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப காணப்பட வேண்டும்.

8. இத்துணைவிதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றுக்கு ஏற்றவாறு விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள் தவிசாளர் : அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்குதல்.

(1) 7 வது வாசகத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியிருப்பின் வளாகத்துக்கு ஏற்ற அனுமதிப்பத்திரம் ஒன்று விண்ணப்பதாரிக்கு வழங்க வேண்டும்.

(2) 7 வது வசணத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கவில்லையாயின் உரிய காரணங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட வேண்டும்.

9. (1) இத்துணைவிதியின் கீழ் விடுவிக்கப்படுகின்ற ஒரு அனுமதிப்பத்திரத்துக்காக அறவிடப்படும் கட்டணம் அடிப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும் கட்டணமாக அமைந்திருக்க வேண்டும். அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்.

(2) அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்காக தொடர்புடைய இடத்தை பரிசோதனை செய்வதற்காக சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அறவிடுவது சட்டபூர்வமானதாக அமைந்திருக்க வேண்டும்.

10. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் ஒன்று இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப முன்னரே இரத்துச் செய்யப்படாத பட்சத்தில் அனுமதிப்பத்திரமானது உரிய ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தியோராம் திகதி வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.

11. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு நபரும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

(1) வளாகம் பதிவு செய்யப்பட்ட வணிகப் பெயரில் இருக்க வேண்டியதோடு அவ்வாறில்லையாயின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவர் நிறுவனத்தின் முகாமையாளராக இல்லாத பட்சத்தில், முகாமையாளர் சம்பந்தமாக தவிசாளரால் கோரப்படுகின்ற அடையாளம் தொடர்பான தகவல்கள் வழங்கப்படவேண்டியதோடு மாறுகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவை அவ்வாறே வழங்கப்பட வேண்டும்.

(3) வளாகத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் விழாக்களை நடாத்துதல்,ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி பாடல்கள் பாடுவது, இசைக்கருவிகள் வாசித்தல் போன்ற பிறருக்கு இடையூறு விளைவிக்கும் எந்த விதமான செயலிலும் அல்லது சட்டவிரோதமான எவ்வித செயலிலும் ஈடுபடக்கூடாது.

(4) வளாகத்துக்கு வருகை தருகின்ற வாகனங்கள் எவையும் பொதுமக்கள் அணுகல்களில் நிறுத்தி வைக்கப்படாத வகையில் போதுமான இட வசதிகள் கொண்டதாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

(5) தங்குவதற்காக வரும் ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் அதே போன்று சுகாதார சேவை பணிப்பாளரினால் அல்லது அதிகாரப் பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரியால் அல்லது தவிசாளரினால் அல்லது அதிகாரப் பிரதேசத்தில் நீதியை நிலைநாட்டும் நிறுவனத்தினால் சேவையை எதிர்பார்த்து நிற்பவர் சம்பந்தமாக அிகாரப் பிரதேசத்தின் சுகாதார காரணங்களுக்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் தகவல் இருப்பின் அந்த சகல தகவல்களும் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் அவசியமாகும். குறிப்பிடப்பட்ட தகவல் மூன்று வருடங்களுக்கு பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டுமென்பதுடன், சூழலிள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதிகாரப் பிரதேசத்தின் நீதியை நிலை நாட்டும் நிறுவனங்களுக்கிடையில் கண்டிப்பான ஒருங்கிணைப்பொன்றினை ஏற்படுத்திக் கொள்ளல் அவசியம் காரணங்களுக்காக பேணப்பட வேண்டும் என முன்கூட்டியே பரிந்துரை செய்யப்படும் தகவல்கள் ஏதும் இருப்பின் அவ்வாறான தகவல்கள் அனைத்தும் பதிவில் பேணப்பட வேண்டும்.

(6) இலங்கை முழுவதும் அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துக்கு ஏற்றவாறு தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தொற்று நோய் நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் ஏதேனும் தொற்று நோய் நிலைக்குரிய விடயங்கள் காணப்படுகின்றன எனத் திருப்தியடையும் பட்சத்தில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைப் பிரகாரம் தவிசாளரால் முன்கூட்டியே பரிந்துரைக்கப்பட்ட விதிகள் இருப்பின் அவ்வனைத்து விதிகளின் கீழும் வளாகத்தைப் பராமரித்தல் வேண்டும்.

(7) தங்குமிட அறைகள் மற்றும் தங்கியிருப்பவர்கள் பயன்படுத்தும் அனைத்து இடங்களிலும் காணப்படும் கழிவறைகள் மற்றும் குளியலறைகள் அனைத்தும் ஒருவர் பயன்படுத்திய பின்னர் மற்றவரின் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு வழங்குவதற்கு முன்னர் தொற்று நீக்கம் செய்யப்படுவதோடு வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கும் நிலையிலும் கழிவறைகள் மற்றும் குளியலறைகள் என்பன தினமும் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(8) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நிலைக்கான ஆபத்து உள்ளது என்ற சந்தேகத்துக்குரிய விடயங்கள் காணப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வளாகத்தின் விடுதிக்கு வருகை தரும் அனைவரினதும் உடல் வெப்பநிலை நிர்ணயிக்கப்பட்ட அளவீடு களுக்கிடையில் உள்ளதா என்பதை அவர்கள் வளாகத்துக்குள் நுழையும் முன்பு குறிப்பிட்ட நபர் ஒருவரால் அவர்களின் வெப்பநிலை அளவிடப்படவேண்டியதோடு வளாகத்துக்குள் நுழையும் முன்பு அவர்களின் இரு கைகள் மற்றும் கால் அடிப்பகுதிகள் என்பன தொற்று நீக்கியைப் பயன்படுத்தி தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(9) அனைத்து அறைகளிலும் வாடிக்கையாளர்களின் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டுள்ள தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள், போர்வைகள், துவாய்கள் போன்றவற்றை முன்னர் கழுவுதல் மற்றும் சுத்தம் செய்யாமல் அடுத்தவரின் பயன்பாட்டுக்காக வழங்கக்கூடாது.

(10) எந்த வகையிலும் குறித்த அறையொன்று தனிநபருக்கானதாகக் காணப்படும் போது ஒன்றுக்கு மேற்பட்ட வயது வந்த நபர்கள் தங்குவதற்கோ அல்லது குறித்த அறையொன்று இருவருக்குரியது என ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டுக்கு மேற்பட்ட வயது வந்த நபர்கள் தங்குவதற்கோ அல்லது குறித்த அறையொன்று மூவருக்குரியது என ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தங்குவதற்கோ, அல்லது குறித்த அறையொன்று குழுவினருக்கு என ஒதுக்கப்பட்ட நிலையில் நபர் ஒருவருக்கு குறைந்த சதுரப்பரப்பாக நான்கு சதுர மீட்டர்கள் என்ற வகையில் காணப்படாத நிலையில் அவ்வறையில் ஆட்கள் தங்குவதற்கோ அனுமதிக்கப்படக்கூடாது என்பதும் இத்துணை வசனத்தை அமுல்படுத்தும் பொழுது ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் வளர்ந்தவர்கள் எனக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

(11) மேலே உள்ள துணை வசனம் 10 இல் குறிப்பிடப்பட்ட அளவிற்கு அறையொன்றில் படுக்கைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

(12) எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிள்ளை ஒன்றுடன் அதனது பெற்றோர் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலர் தவிர்த்து எவரையும் தங்குவதற்கு அனுமதிக்கக் கூடாது.

(13) வளாகத்தில் உள்ள அறைகளைத் தவிர எந்த ஒரு நபரையும் திறந்த வெளியில் தூங்குவதற்கு அனுமதிக்கக்கூடாது.

(14) அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் அல்லது அடையாளம் உறுதிப்படுத்தப்பட முடியாத எவரையும் வளாகத்தில் தங்க அனுமதிக்கக்கூடாது என்பதோடு தங்கியுள்ள அனைவரைப் பற்றிய தகவல்களும் அவர்கள் கையெழுத்திட்டு வெளிப்படுத்திய வாக்குமூலமாக அமைந்திருக்க வேண்டும்.

(15) அறைகள் குளிரூட்டப்படாதனவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அனைத்து அறைகளும் நன்கு காற்றோட்டம் பெறும் வகையில் குறிப்பிட்ட நேரத்துக்கு கதவு மற்றும் ஜன்னல்களைத் திறந்து வைத்து பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும்.

(16) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் ஏதேனும் நோய்த்தொற்று நிலை தொடர்பில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஏதாவது ஒழுங்குவிதி நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த விதி தொடர்பான அனைத்து ஏற்பாடுகளுக்கும் ஏற்றவாறு வளாகம் பராமரிக்கப்பட வேண்டும்.

(17) வளாகத்துக்குரிய மின் இணைப்பு திடீரெனத் தடைப்படும் சந்தர்ப்பங்களில் தொடர்ந்து மின்சாரத்தை வழங்கும் வகையில் மின் பிறப்பாக்கிகள் நிரந்தரமாக பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.

(18) வளாகத்துக்குரிய நீர் இணைப்பு நன்கு பராமரிக்கப்பட வேண்டியதோடு போதுமான அளவு தண்ணீரை சேமிப்பதற்கான வசதிகள் எப்போதும் காணப்பட வேண்டும்.

(19) வளாகத்தில் பணி புரிவதற்கு போதிய எண்ணிக்கையான ஊழியர்கள் காணப்பட வேண்டியதோடு அவர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைகளுக்கு ஏற்ப சுகாதாரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும், அவர்களை சுகாதார வைத்திய அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அல்லது மருத்துவரீதியாக அல்லது தொற்றுநோயாகக் கருதப்படக்கூடிய காலப்பகுதிகளில் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

(20) வளாகத்துடன் தொடர்புடைய கழிவு நீர் மற்றும் மலக் கழிவுகள் என்பன கழிவுநீர்க்குழி, உறிஞ்சும் குழி அல்லது மத்திய சுத்திகரிக்கும் நிலையத்துக்கு தேவையான சரிவுடன் அனுமதிக்கப்பட்ட முறைமையில் அனுப்பப்பட வேண்டியதோடு தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். உறிஞ்சும் குழிகள் நீர் மூலத்தில் இருந்து குறைந்த பட்சம் 15.25 மீட்டர்கள் தொலைவில் அமைந்திருக்க வேண்டும்.

(21) வளாகத்தில் உள்ள வடிகான்கள் முறையாக நீர் வடிந்தோடும் வகையில் அமைக்கபப்பட்டிருக்க வேண்டியதோடு தினமும் இரண்டு தடவைகள் அவை தொற்று நீக்கி பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(22) (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட வளாகம் ஒன்றில் தங்குபவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுமாயின்,

(i) உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களும் எவ்வித நச்சுக்கள், சுவைகள், அல்லது நாற்றங்களைப் பரப்பாத, உறிஞ்சாத பொருளால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அவை துருப்பிடிக்காத மூலப்பொருட்களினால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) சமையலுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன எளிதாக சுத்தம் செய்யப்படக்கூடியனவாக இருத்தல் வேண்டும்.

(iii) கழிவுகளை அகற்ற பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் உலோகம் அல்லது கசிவு ஏற்படாத மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டு அவை மூடியினைக் கொண்டனவாகக் காணப்பட வேண்டும்.

(iv) உணவு தயாரிப்பதற்கான உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன பயன்பாட்டுக்கு ஏற்ற நிலையில் காணப்பட வேண்டும்.

(v) உணவு தயாரிப்புக்கான பொருட்களை மற்றும் சமைத்த உணவினை வளாகத்தில் வைத்துக்கொள்ள தனித்தனியான போதியளவு குளிரூட்டி வசதிகள் காணப்பட வேண்டும்.

(vi) உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பழங்கள் மற்றும் மரக்கறிகள் போன்றவை நன்கு கழுவி சுத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

(vii) வளாகத்தினுள் சமைத்த உணவுப் பொருட்களை தங்கியிருப்போருக்கு தீங்கற்ற விதத்தில் வழங்குவதற்கான குறித்த உள்ளக நிகழ்ச்சித்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுக் காணப்படுவதுடன் அந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த உரிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(viii) கொண்டுவரப்படும் மீன் மற்றும் இறைச்சி என்பன வளாகத்தின் தனியான குளிரூட்டியில் களஞ்சியப்படுத்த வேண்டியதுடன் அவற்றை பயன்பாட்டுக்கு எடுக்கும் வரை அவை இரண்டு பாகை செல்சியஸ் வெப்பநிலையில் பேணப்பட வேண்டும்.

(ix) வளாகத்தில் உணவு பரிமாறும் செயற்பாடு ஒன்றில் ஈடுபடும் அனைவரும்,

(அ) தமது கைகள் அல்லது விரல்கள் திறந்து காணப்படும் நிலையில் உணவைத் தொடவோ கையாளவோ கூடாது.

(ஆ) சேவையில் ஈடுபடும் வேளை எவ்விதப் பணப் கையாள்கையையும் மேற்கொள்ளக் கூடாது

(இ) உணவுக் கையாள்கையின் பொழுது பயன்படுத்தும் கையுறைகள் சிறந்த முறையில் காணப்பட வேண்டும்.

(ஈ) கைகளைத் துடைப்பதற்கு சுத்தமான துண்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

(உ) பயன்படுத்தப்படும் பீங்கான கோப்பைகள் அல்லது வேறு எந்தப் பாத்திரங்களின் அடிப்பகுதியும் எந்த உணவுடனும் தொடுகை அடையாதவாறு பேணப்படல் வேண்டும்.

(ஊ) உணவு விநியோகத்துக்குபயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களும் சுத்தமாகப் பேணப்படுவதோடு அவை தனித்தனியான பாத்திரங்களில் இடப்பட்டு வைக்கப்பட வேண்டும்.

(எ) எந்த விதத்திலும் தமது செயற்பாடுகள், பாத்திரங்கள் மூலம் எந்த வகையிலும் உணவு மாசடையும் அல்லது நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்படாத வகையில் உணவைகக் கையாளும் சேவகர்கள் செயற்பட வேண்டும்.

(ஏ) உணவு பதப்படுத்தல் தொடர் செயன்முறைக்கு பொருந்தக்கூடிய சுகாதார விதிமுறைகள் பற்றிய புரிதல் காணப்பட வேண்டும்.

(x) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் பொருந்தக்கூடிய தொற்றுநோய் பிரகடனப்படுத்திய நிலை அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய்நிலை ஆபத்து நிலவுகின்றது என சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கு ஏற்ப தவிசாளர் அறிவித்துள்ள நிலையில் வளாகத்தில் உணவு தயாரித்தல், பயன்படுத்துதல் மற்றும் பரிமாறல் பணியில் ஈடுபடும் அனைவரும் இத்துணைவிதியின் கீழ்க் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி, அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழங்கிய பரிந்துரைகள் பிரகாரம் தவிசாளரின் உத்தரவுகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

(xi) உணவு பரிமாறவும் பயன்பாட்டுக்காகவும் வளாகத்தில் ஒரு குறிப்பிட்ட இடம் காணப்பட வேண்டியதோடு அவ்விடம் சூழப்பட்ட இடமாகவும் காற்றோட்டம் மிக்கதாக அல்லது குளிரூட்டல் வசதிகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(xii) உணவு உண்பதற்கு முன்னர் கைகளை சுத்தம் செய்யும் வசதிகள் வழங்கப்பட வேண்டும். போதிய அளவில் சவர்க்காரம் மற்றும் தொற்று நீக்கல் திரவங்கள் வைக்கப்பட்டிருக்க வேண்டும் அத்துடன் கைகளை உலர்த்துவதற்கான வசதிகளும் காணப்பட வேண்டும்.

(xiii) உணவுப் பயன்பாட்டுக்கும் பரிமாறுவதற்குமான மேசைகள் மிகவும் சுத்தமாக பேணப்பட வேண்டியதோடு ஒவ்வொரு பரிமாறலுக்குப் பின்னரும் அம்மேசைகள் தொற்று நீக்கி கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டியதோடு அதற்காகப் பயன்படுத்தப்படும் துவாய் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

(23) வளாகத்தின் சுவாச ஒழுக்கம் மற்றும் கைகளின் சுத்தத்தன்மை ஆகியவற்றை தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

(24) மேசையின் மீது உணவு வகைகள் அட்டையினை வைப்பதற்கு பதிலாக முடிந்த அளவுக்கு உணவு வகைகள் திரை ஒன்றின் ஊடாக காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(25) பணிக்கமர்த்தப்படும் ஊழியர்கள் தொடர்பில் சுகாதார அவதானிப்பு முறைமை உருவாக்கப்பட்டு அவர்களுக்குரிய சுகாதார அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான ஒரு செயன்முறை உருவாக்கப்பட வேண்டும்.

(26) நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகள் எவ்வகையிலும் வளாகத்தினுள் நுழைய அனுமதித்தலாகாது.

(27) வளாகத்தில் சேரும் குப்பைகளை சபையினால் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் குப்பை முகாமைத்துவ திட்டத்தின் படி மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக எழுதப்பட்ட சட்டத்திற்கு ஏற்றவாறு அகற்றுவதற்கான வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

(28) ஏதேனும் பரவும் நோய்நிலை கொண்ட அல்லது தொற்று நோயினால் அவதிப்படுகின்றவர் எனக் கருதப்படக்கூடிய அளவில் அறிகுறிகள் கொண்ட எந்த ஒரு நபரையும் எச்சந்தர்ப்பத்திலும் வளாகத்தினுள் அனுமதிக்கப்படக் கூடாது.

(29) வளாகத்தில் தங்கியிருக்கும் எந்த ஒரு நபருக்கும் அல்லது வளாகத்தில் பணிபுரிகின்ற எந்த ஒரு நபருக்கும் பரவும் தன்மை கொண்ட, தொடுகை மூலம் பரவுகின்ற அல்லது ஒரு தோல்நோய் நிலை ஏற்படின் அது பற்றி வளாகத்துக்குரிய அனுமதிப் பத்திரம் பெற்றவர் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்க வேண்டியதுடன் அத்தகைய அறிவிப்புக்கு பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்பட்ட தனிமைப்படுத்தல் அறிவுரைகளுக்கு இணங்க வளாத்துடன் தொடர்புடைய அனைவரும் செயற்பட வேண்டும்.

(30) வளாகம் தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ள போது அவ்வாறான தனிமைப்படுத்தல் காலம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அதற்கான சான்றிதழ் ஒன்றை சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழங்கிய பின்னர் வளாகத்தை முழுமையாக தொற்று நீக்கம் செய்யாமல் எந்த ஒரு நபரையும் தங்குவதற்கு அனுமதிக்கக்கூடாது.

வளாகத்தினுள் நுழைதல் மற்றும் மாதிரிகளைச் சேகரித்தல்.

12. இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க வளாகம் செயற்படுகின்றதா என்பதனை பரிசோதிக்க தவிசாளரினால் அதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லத வேறு ஒரு அதிகாரி எந்த ஒரு நியாயமான நேரத்திலும் வளாகத்துக்குள் நுழைதல் மற்றும் மாதிரிகளைச் சேகரித்தல் என்பன சட்டபூர்வமானதாகும்.

13. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு தொற்று நோய்ப்பரவலுக்கான விடயங்களைக் கருத்திற்கொண்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரையின் படி அனுமதிப்பத்திரம் பெற்றவர் வளாகத்தை பராமரிக்கும் முறை தொடர்பில் ஒப்புதல் வெளிப்படுத்துகை ஒன்றை வழங்க வேண்டும் என தலைவர் பரிந்துரைக்கும் வேளை உத்தரவாதம் பெற்றவர் தவிசாளருடன் ஒப்புதல் வெளிப்படுத்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டியதோடு அவ்வாவணத்தின் ஒரு பிரதி சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

14. (01) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற வளாகம் ஒன்று இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை மீறும் நிலையில் அல்லது அவற்றுக்கு மாற்றமாக செயற்படும் சந்தர்ப்பத்தில் இத்துணைவிதிக்கு ஏற்ப முப்பது நாட்களுக்கு மேற்படாத குறிப்பிட்ட காலத்தை வழங்கி ஓர் அறிவித்தலை தவிசாளர் அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்க வேண்டும்.

(02) இவ்வாசகத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் அவ்வாறானதோர் அறிவித்தலை அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்கிய பின்னர், உரிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதற்கு நியாயமான காரணங்களுடன் மேலதிக காலம் வழங்குமாறு மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்கு தவிசாளரால் மேலதிக கால அவகாசம் வழங்க முடியும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிகக் காலம் முதல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலத்தில் இருந்து அதிக பட்சம் பதினான்கு நாட்களுக்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்.

15. மேலே 14 ஆவது வாசகத்தில் வழங்கப்பட்ட கால எல்லை அல்லது நீடிக்கப்பட்ட கால எல்லைக்குள் அறிவித்தலுக்கு ஏற்ப செயற்படுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் தவறும் பட்சத்தில் தவிசாளர் உரிய அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

தண்டனை

16. இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி அல்லது இத்துணைவிதியின் கீழுள்ள ஏற்பாடுகளை மீறி வளாகமொன்றைப் பராமரிப்பது குற்றமாவதோடு அக்குற்றம் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153(2) ஆவது உப பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். அத்தகைய குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்னரும் மீறல் தடையின்றித் தொடரும் நிலையில் அல்லது தவிசாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மேலும் மீறல் தொடரும் நிலையில் ஒவ்வொரு நாளும் மேற்குறிப்பிடப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153(2) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

17. இத்துணைவிதியில் சொற்கள் தொடர்பில் விளக்கம் அவசியமாயின் மாத்திரம் இத்துணைவிதியில், "சபை" என்பது பேலியகொட நகர சபையாகும்,

"தவிசாளர்" என்பது பேலியகொட நகர சபையின் தற்காலதத்தில் தவிசாளர் பதவி வகிக்கும் அல்லது அப்பதவியின் கடமைகளை நிறைவேற்றும் நபராகும்,

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பது பேலியகொட நகர சபையின் தவிசாளரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியாகும்,

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அவ்வாறான பதவியை வகிக்கும் நபராகும்,

"தங்குமனை தங்கும் வீடு" என்பது எந்தவொரு நபருக்கும் சில காலத்துக்கு தங்குவதற்காக வழங்கப்படுகின்ற ஒரு இடம்,

"அடிப்படைச் சட்டம்" என்பது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயமாகும்,

எனும் பொருளாகும்.

"நியாயமான நேரம்" என்பது அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட பணி அல்லது அதற்குரிய செயலில் ஈடுபடுகின்ற எந்த நேரமுமாகும்.

19. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள வடிவம் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

......................... **ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.**

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. தனிப்பட்ட விலாசம் :
03. தேசிய ஆளடையாள அட்டை இல. :
04. தொலைபேசி இல. :
05. விற்பனை நிலையம் நடத்தப்படும் இடம் :
06. ஆரம்பித்த ஆண்டு :
07. வியாபாரத் தலத்தின் முகவரி :
08. கிராம அலுவலர் பிரிவு :
09. ஆதன வரி இலக்கம் :
10. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் இலக்கம் மற்றும் திகதி :
11. வணிகப் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் குறிப்பு இலக்கம் :
12. வியாபார நிலையத்தின் முகாமையாளர் அல்லது பிரதிநிதியின்,
    I. பெயர் மற்றும் தனிப்பட்ட முகவரி
    II. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்
    III. கையடக்க தொலைபேசி இலக்கம் :- நிலையான தொலைபேசி இலக்கம் :

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.
மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி நடத்தப்படும் தொழில், வர்த்தகத்துக்கு ...................... ஆண்டுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான தற்போதைய சட்ட திட்டங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

திகதி: ............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

அலுவலகப் பயன்பாட்டுக்கு

வருமான ஆய்வாளர்,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி : ................................
செயலாளர்

---

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை.

திகதி : .......................................
வருமான ஆய்வாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி : ................................
செயலாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

துணைவிதி மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன/ செய்யப்படவில்லை அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்து/செய்யாது அறிக்கையிடுகின்றேன்.

திட்டம் : ...............................

................................
திகதி : பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

---

செயலாளர்,

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் உரிய இடத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

(பரிந்துரைக்கவில்லை எனின் அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக).

திகதி : ................................
சுகாதார வைத்திய அதிகாரி

---

வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்.

திகதி : ................................
நகராதிபதி
பேலியகொட நகர சபை.

EOG 04 - 0013

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.